- அலகு 2

- பல்வகை தன்மை கொண்ட வகுப்பறைகளில் கற்பித்தல்

- பல்வகை என்பதன் கருத்து விளக்கம்

- பல்வகை என்பது பல்வகை வேறுபாடுகள் உள்ளடக்கிய தொகுதி என்று பொருள் படும்.வகுப்பறைகளில் கற்பித்தலுக்கான உத்திகள் மற்றும் செயல்திட்டங்கள், பல்வகை உடைய வகுப்பறையில் திறம்பட கற்பித்தல் ஆகியவை விவாதிக்கப்பட உள்ளன

- சமூக பல்வகைமை

- சமூக பல்வகைமை என்பது குறிப்பிட்ட பண்பாடு கொண்ட சமூகத்தில் வாழ்வோர் தமக்குள் பல்வேறு விதங்களில் சாதி மதம் மொழி வட்டார பொருளாதார நிலை அடிப்படையிலான வர்க்கம் தொழில் ரீதியான பாகுபாடு போன்றவை மாறுபட்டு பல பிரிவுகளாக இருத்தலை குறிக்கிறது.

- வகுப்பறை பல்வகைமை

- பல்வகை தன்மை உடைய மாணவர்களை கொண்ட வகுப்பறை என்பது பலதரப்பட்ட மாணவர்களை அதாவது நுண்ணறிவு, கற்கும் திறன், மொழித்திறன், ஆர்வங்கள், நாட்டங்கள், கற்கும் பாணி சமூக பொருளாதார நிலை ஆகியவற்றில் வேறுபடும் மாணவர்களை உள்ளடக்கிய பள்ளி வகுப்பறை என்று பொருள் கொள்ளப்படுகிறது.

- பல்வகை தன்மை உடைய வகுப்பறை என்பதன் பொருள்

- சமூகத்தில் விளிம்பு நிலையில் உள்ளோர் மற்றும் கற்றல் குறைபாடு உடையவர்கள் தமது உடல் மற்றும் உளம் சார்ந்த சமூக பொருளாதார நிலைகளில் பெருத்த வேறுபாடு கொண்டு விளங்குவதோடு கற்கும் திறன்களில் கணிசமாக வேறுபடும் மாணவர்களை கொண்ட பள்ளி வகுப்பறையே பல்வகை தன்மை உடைய வகுப்பறை எனப்படும்.

- பள்ளி வகுப்பறைகளில் காணப்படும் வேறுபாடுகளின் வகைகள்

- கற்றல் பாணிகள், கற்றலில் கொண்டிருக்கும் ஊக்கத்தின் அளவுநிலைகள், தம்மை சுற்றி உள்ள உலகை பற்றி கொண்டுள்ள அபிப்பிராயங்கள் போன்றவற்றை பற்றி அறிந்திடல் கடினமாகும்.

- 1. மாணவர்கள் பின்னணி
- 2. அறிந்துணர்தலில் நாட்டம்
- 3. மாணவர்களது ஊக்கநிலை வேறுபாடு
- 4. கற்கும் குறைபாடுகள்
- 5. பல்வேறு கருத்துக்களும் நம்பிக்கைகளும் கொண்ட மாணவர்கள்
- 6. பழக்க வழக்கங்களில் வேறுபடுதல்
- 7. கலாச்சார வேறுபாடு பற்றிய விழிப்புணர்வு கொண்டிருத்தல்
- <u>வகுப்பறை சூழல் பாதிப்புகள்</u>
- வகுப்பில் பல்வேறு சாதி சமய இன பண்பாட்டு பின்னணி பழக்க வழக்கங்கள், விளிம்பு நிலைக்கு தள்ளப்பட்ட சமூகத்தினர், பாலின வேறுபாடுஉடையோர் கற்றல் திறமையில் வேறுபாடு உடையோர் உடல் குறைபாடு உடையோர் என மாணவர்கள் அமைந்து இருப்பதால் வகுப்பறை சூழல் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிறது.
- <u>கற்றிட வேண்டியவற்றை வேறுபடுத்தி வழங்கல்</u>
- மாணவர்கள் கற்றிட வேண்டியவற்றை வேறுபடுத்தி வழங்கல் என்பது பாட ஏற்பாட்டில் உள்ள பல்வேறு பாட தலைப்புகளில் இடம் பெரும் கருத்துக்கள், வளர்த்துக் கொள்ள வேண்டிய செய்திறன்கள் மற்றும் உடன்பாட்டு மனப்பான்மைகள் ஆகும்.
- பாட கருத்துக்களை வழங்கிடுவதில் பின்பற்ற கூடிய பல்வேறு முறைகளை செய்துகாட்டல், விரிவுரை ஆற்றுதல், விளக்கமளித்தல், சொல்லாடல், கணினி வரைபடங்கள் பயன்படுத்துதல் போன்றவற்றை கற்றிட வேண்டியவற்றை வேறுபடுத்தி வழங்கல் என்று அறியப்படுகிறது.
- <u>வேறுபட்ட கற்கும் முறைகளை பயன்படுத்துதல்</u>
- கற்றல் செயல்களான செயலரங்கம், குழுவாக கற்றல், கற்றல் குறைபாடு உடையோர் மனவளர்ச்சி குன்றியோர், முறையான வகுப்பறை கற்பித்தலுக்கு பின் பள்ளி நேரத்திற்கு வெளியே சிறப்புக்கல்வி ஆசிரியர்களின் உதவியோடு பள்ளி வளாகத்தில் அமைந்து உள்ள கற்றல் வள மையத்தில் தமது கற்றலை வலுப்படுத்தி மேம்படுத்திக் கொள்வதற்கு ஏற்பாடு செய்திடலாம்.

- <u>வகுப்பறையில் கற்பித்தலுக்கு ஆசிரியர்களை தயார்படுத்துதல்</u>
- தீவிர கற்பித்தல் மூலம் பள்ளிகளில் பாடத்தை தொடங்கும் திறன், பாடகருத்துக்களை விளக்கும் திறன்,வினாத்தொடங்கும் திறன், கரும்பலகையை முறையாக பயன்படுத்தும் திறன், பல்வகை தூண்டல்களை பயன்படுத்தும் திறன் மற்றும் பாடத்தை முடிக்கும் திறன் போன்றவற்றை நுண்ணிலை கற்பித்தல் மூலம் பயிற்சி செய்து இணைப்பு பாடம் மூலம் பொருத்தமான கற்பித்தல் திறன்களை இணைந்திடும் திறமையையும் வளர்த்து கொள்ள வேண்டியது அவசியம் .

<u>பல்வகை வகுப்பறையில் கற்பித்தலுக்கான உத்திகள்</u>

1. குழுவினர் ஆய்வு செய்து கற்றல்
2. குழு செயல்திட்டப்பணி
3. குழு இடை வினை புரியும் அமர்வுகள்
4. கூட்டுறவுடன் கற்றல்
5. இணைந்து கற்றல்
6. குழு விவாதம்.

குழுவினர் ஆய்வு செய்து கற்றல்:

- ஹெர்பர்ட் தெலன் என்பவர் அறிமுகப்படுத்திய கற்பித்தல் உத்தி கற்றலை வாழ்க்கை சூழலோடு இணைத்தலை அடிப்படையாக கொண்டது.
- மாணவர் குழு பிரச்சினை நிகழ்வு குறித்து ஆராயும் போது தேவைப்படும் அனைத்து வசதிகளையும் ஆசிரியர் ஏற்படுத்தி தருவதோடு குழுக்களின் செயல்பாட்டை தொடர்ந்து கண்காணித்து வருவார்.
- தேவைப்படும் குழுவுக்கு ஆசிரியர் உரிய ஆலோசனை அளித்து வழி காட்டுதல் அளித்திடுவார்.

<u>பயன்பாடு:</u>

.1. இக்கற்பித்தல் உத்தி மாணவர்களின் ஆராய்ந்து பார்க்கும் ஆர்வத்தை கற்றலுக்கு பயன்படுத்தி கொள்கிறது.

2. கற்பித்தல் மாணவர்களின் ஈடுபாடு அதிகம் அதனால் கற்றல் எளிதாகிறது.

3. மாணவர்களிடம் பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் இடைவினைகளும் மேம்பட்டு கற்றல் எளிதாகிறது

4. தர்க்கரீதியாக சிந்தித்தல், பொருத்தமான முடிவுகளை ஊகித்து தீர்வு காணல்.

வரம்புகள்:

- 1. மாணவர்களின் சுய ஈடுபாடு அதிகம் தேவை
- 2. மாணவர்களை ஆசிரியர் தொடர்ந்து கண்காணித்தல் அவசியமாகிறது
- 3. ஆசிரியரின் பணிச்சுமை அதிகரிக்கிறது
- 4. கற்கும் திறன் குறைந்த மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் உள்ள வகுப்புகளுக்கு இது ஏற்றதல்ல.

குழுச்செயல்திட்டப்பணி:

- கூட்டுறவுடன் கற்றல் என்பதன் ஒரு வடிவமைப்பு.
- வகுப்பில் உள்ள மாணவர்களின் செயல்திட்டத்தை பல அணிகள் ஆக பிரித்து ஒவ்வொரு அணிக்கும் ஒரு செயல்திட்டத்தை அளித்திடுவதற்கு பதிலாக ஒரு குறிப்பிட்ட செயல்திட்டத்தை வகுப்பு மாணவர்கள் அனைவரும் இணைந்து ஒரு அணியாக செயல்பட்டு மேற்கொண்டு இடலாம்.

நோக்கங்கள்:

- 1. கூட்டுறவுடன் கற்றலை ஊக்குவிக்கிறது.
- 2. மாணவர்களை சமூக நெறிப்படுத்துகிறது
- 3. மாணவர்களது கற்றல் அறிவுப்புலம், உணர்வுபுலம், உள-உடல் இயக்க புலம், என மூன்று களங்களிலும் நடைபெறுகிறது.

நன்மைகள்:

- மாணவர்களிடம் சமூக விழுமங்களையும் சமூக நெறிமுறைகளையும் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் அங்கீகரிக்க படாத நடத்தைகளை அறிந்து அதற்கேற்ப நடந்து கொள்ளுதல் தோற்றுவிக்கிறது.

வரம்புகள் மற்றும் குறைபாடுகள்:

- 1. கற்பித்தல் உத்தி அனைத்து பாடங்களையும் குழு அளவில் கற்பிக்க ஏற்றதன்று.
- 2. அதிக பொருள் செலவும் நேரமும் தேவைப்படுகிறது.
- 3. ஆசிரியரின் தொடர் கண்காணித்தல் அவசியமாகிறது
- 4. சுயமாக செயல்படும் மாணவர்களுக்கு இந்த கற்பித்தல் உத்தி பொருந்தும்.

குழு விவாதம்:

- வகுப்பறை விவாதம் என்பது ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கு இடையே அல்லது மாணவர்கள் தமக்கு இடையே நடைபெறும் கருத்து பரிமாற்றம் மூலம் துடிப்புடன் கற்றல் நிகழ்ந்து வரையறுக்கப்பட்ட கற்பித்தல் குறிக்கோள்கள் அடையப் படுதலாகும்.

குழு விவாதம் நடத்துதல்:

- வகுப்பறை மாணவர்களும் ஆசிரியரும் சேர்ந்து விவாதக்குழு உறுப்பினராக செயல்படுவர்.
- விவாதத்தின் போது ஆசிரியர் ஆற்றிடும் பங்கு மற்றும் பணிகள் குறித்து விவாதக்குழு தலைவராக அனைவரும் ஏற்றுக்கொள்வர்.

செயல்திட்டங்கள்:

- 1. பண்பாட்டு நடைமுறைகளுக்கு இசைவான கற்பித்தலை செயற்படுத்திடல்.
- 2. மாணவர்களிடம் அக்கறையோடு கூடிய நெருக்கமான உறவை ஏற்படுத்தி கொள்ளுதல்.
- 3. மாணவர்களது கற்றல் அடைவில் பெற்றோர் மற்றும் சமுதாயத்தின் ஈடுபாட்டை பெற்றிட முனைதல்

பலதரப்பட்ட வகுப்பறையில் திறம்பட கற்பித்தல்:

1. பாட கருத்துக்களை எளிமைப்படுத்தி வழங்கல்.

2. வகுப்பறை கல்வி செயல்களில் குழுப்பணிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்தல்.

3. மாணவர் செய்திடும் பணிகளுக்கு உடனுக்கு உடன் பின்னுட்டம் அளித்தல்

4. வகுப்பறை கற்றலில் மாணவர்களது இடைவினை அதிகம் உள்ளவாறு பார்த்துக்கொள்ளுதல்.

கூட்டுறவுடன் கற்றல்:

- இரண்டு அதற்கு மேற்பட்ட மாணவர்கள் ஒருங்கிணைந்து கற்றல் செயல்களில் ஆர்வத்துடன் ஈடுபாடு செலுத்துவது கூட்டுறவுடன் கற்றல் என்பதாகும்.

1. ஆசிரியர் தொடங்கிட மாணவர் பதில் தருதல்

2. மாணவர் தொடங்கிட ஆசிரியர் பதில் தருதல்.

* பள்ளிக்கு உள்ளே மற்றும் வெளியே கற்றல் :

பள்ளிக்கு உள்ளே மற்றும் வெளியே கற்றல் என்பது கற்பதற்கான பாட ஏற்பாட்டை பள்ளிக்கு வெளியே உள்ள வாழ்க்கையோடு தொடர்புற செய்தல் மற்றும் கற்றலில் உள்ள அணுகுமுறைகள், கற்றலினால் விளையும் நன்மைகள் பற்றி விவாதிக்கப்பட உள்ளன

**பள்ளிகள் அற்ற சமுதாயம்** என்னும் **இவான் இலிச்** 1974 ல் வெளியிட்ட கருத்து அடிப்படையில் பள்ளி களை சீர்திருத்துவதற்க்கு அப்பாலும் நம் முயற்சிகள் செல்ல வேண்டும்.

கல்வியின் அடிப்படையை நாம் ஆராய வேண்டும்.

பள்ளிக்கு வெளியே கற்றல் என்ற கருத்தை 1987ல் லாரன் ரோஷ்ணிக் என்பவர் அமெரிக்காவில் வாஷிங்டன் நகரில் வேளாண் பொருளாதார ஆய்வு கழகத்தில் முன்னிலை படுத்தினார்

முக்கிய அம்சங்கள்

சமூக சூழலில் கற்றல்

பொருள்கள் மற்றும் நிகழ்வுகள் அவற்றின் சூழ்நிலைக்கு தகுந்தவாறு தொடர்பு கொண்டு நேரிடை அனுபவங்கள் மூலம் கற்றல்

வடிவமைக்க படாத ஆனால் நன்கு திட்டமிட்ட கற்றல் சூழல்கள்

உற்றுநோக்கல் மூலம் கற்றலுக்கு முக்கியத்துவம் அளித்தல்.

கற்றலின் நோக்கங்கள்

அன்றாட வாழ்க்கையில் வெற்றிகரமாக வாழ்ந்திட தேவைப்படும் அறிவு சார் திறன்களையும், உடல்சார் திறன்களையும் மாணவர்களிடம் வளர்த்திடல்

தொழில் திறன்களுக்கான அடிப்படை அறிவை பெற்று எதிர்கால வாழ்வில் சுய சார்புடன் விளங்கிட செய்தல்

சிறந்த குடிமகனாக தமது கடைமைகளை செய்த்திட ஆயத்த படுத்துதல்

1. கூர்ந்து நோக்கல்

2. ஆராய்ந்து அறிதல்

3. சூழ்நிலைகளுக்கு ஏற்ற கருவிகளையும் உத்திகளையும் தேர்வு செய்து பயன்படுத்துதல்

4. சகமாணவர்களோடு இணக்கமாக செயல்படுதல்

5. கற்றலை பகிர்ந்து கொள்ளுதல்

பள்ளியில் கற்றல்:

- வகுப்பறை கற்றலில் ஆசிரியரே துடிப்புடன் செயல்பட்டு பாடகருத்துக்களை மாணவர்களிடம் சேர்ப்பிக்கிறார் .
- மாணவர் கற்றலில் ஆசிரியர் பெரும்பங்கு வகிக்கிறார்.

பள்ளிக்கு வெளியே கற்றல்:

- மாணவர்கள் கற்றல் செயல்களை தமக்குள் பகிர்ந்து கொண்டு இணைந்து கற்றலில் ஈடுபடுகிறார்கள்.அதாவது மாணவர்கள் குழு மனப்பான்மையுடன் செயல்படுகிறார்கள்.

உற்றுநோக்கி கற்றல் என்பதன் பொருள்:

- உற்றுநோக்கி கற்றல் என்பது பிறர் செயல்படுவதை கூர்ந்து கவனித்து அச்செயலில் இடம் பெரும் உட்கூறுகளையும் அவை அமைந்து உள்ள விதத்தை புரிந்து கொண்டு மனதில் இருத்தி தாமும் போன்ற செயலை திரும்ப திரும்ப செய்துபார்த்து ஏற்படும் தவறுகளை களைந்து பார்த்ததை போன்றே செய்தல்.

உற்றுநோக்கி கற்றலின் முக்கியத்துவம்:

- பள்ளிக்கு வெளியே சென்று இயற்கை மற்றும் சமூக சூழலில் கற்பதே மாணவர்களுக்கு முழுமையான செயல்படு அறிவையும் சமூகத்தில் திறமையாக இயங்கும் செயல்திறனை அளித்திடும் செயல்திட்டப்பணி வழியே கற்றலுக்கு ஜான் டெவெய் ஊக்கமளித்தார்.

வகுப்பறைக்கு வெளியே கற்றலுக்கான அணுகுமுறைகள்:

- மருத்துவமனைகள், பொறியியல் தொழில்கூடங்கள், தாவரவியல் பூங்கா மற்றும் மிருக காட்சி சாலை பல்வகை தொழில் கூடங்கள் போன்றவை மூலம் கற்றலே அண்மை காலத்தில் மாற்றம் பெற்று உள்ளது
- இணைய தளத்தை பயன்படுத்தியும் வலைதளத்தை பயன்படுத்தியும் புது வகை உணவு தயாரித்தல் போன்றவை அடங்கும்.
- கள பயற்சி அளித்தல்
- கள ஆய்வு
- இணைய வலை தளங்கள் வழியே கற்றல்

கள பயிற்சி:

- கள பயணம் என்பது வகுப்பறைக்குள் கொண்டு வரமுடியாத பொருள்கள் கருத்துக்களோடு மாணவர் முழுமையான புலன் அனுபவம் பெற வேண்டும் என்பதற்காக வடிவமைக்கப்பட்ட பயிற்சி.
- கள பயிற்சிக்கு முந்தைய கட்டம்
- ஒளிப்பேழை
- நழுவல்கள்
- கள பயிற்சி கட்டம்
- சேகரிக்க வேண்டிய தகவல்கள் மற்றும் காட்சிகள்
- கள பயிற்சிக்கு பிந்தைய கட்டம்
- உற்றுநோக்கல்கள் மற்றும் பெற்ற அனுபவங்கள், வரைபடங்கள், கதைகள், கவிதைகள்.

இணைய வலை தளங்கள் வழியே கற்கும் அணுகுமுறை:

- இணைய வலை தளங்கள் வழியே கற்கும் அணுகுமுறை
- இணைய தள வழியே கற்கும் போது கணினியை இயக்க கூகுளை தேடுதல் எந்திரம் வழியே கற்க வேண்டிய தலைப்போடு தொடர்போடு இணைய வலை தளங்கள் தேடுதல்
- பெறப்பட்ட தகவல்களை செம்மை படுத்தி கோர்வையாக சீர் படுத்தி கட்டுரை வடிவில் உரை நடை பகுதி மற்றும் படங்கள் கொண்டதாக தயாரித்தல்.

வகுப்பறைக்கு வெளியே கற்றல் நன்மைகள்:

- வகுப்பறைக்கு வெளியே கற்றல் நன்மைகள்
- மாணவர்கள் சூழ்நிலையோடு நெருக்கமாக தொடர்பை பெற உதவுகிறது
- கூர்ந்து நோக்கும் திறனையும் ஆய்வுத்திறனையும், இயற்கை நிகழ்வுகள் அவற்றின் சரியான பின்னணி அமைப்பில் கண்டறிய முடிகிறது

வரம்புகள்:

- அதிக நபர்கள் மேற்பார்வை செய்திடல் மற்றும் தேவைப்படும் உதவிகளை அளித்தல்
- பள்ளி பாடவேளை அட்டவணையை அமைத்திடல் மிக கடினம்
- செலவு மிக்கது

ஆசிரியர் எதிர்கொள்ளும் வகுப்பறை சிக்கல்கள்

மாணாக்கரின் கவனமின்மை ஒரு வகுப்பறை பிரச்சினையாகும். மாணவர்களோடு இடைவினை செய்தல் மற்றும் பரவலாக வினாக்களை பகிர்ந்து அளித்தல்,கவனம் செலுத்தாத மாணவரை மென்மையாக கடிந்து கொள்ளுதல், பல்வகை தூண்டல்களை கற்பித்தலில் பயன்படுத்துதல்.

வகுப்பறையில் உள்ள மாணவர்களின் நுண்ணறிவு, கற்கும்திறன், ஆர்வம், நாட்டங்கள் போன்றவை வேறுபட்டு காணப்படுகிறது

ஆசிரியருக்கு கற்பித்தல் திறனோடு மாணவரை அமைதியுடன் கற்க செய்யும் திறனும் தேவையாகும்.

கற்றல் செயல்களில் மாணவர்களது ஈடுபாடு நிலைகள்

உண்மையான ஈடுபாடு

சடங்கு ரீதியிலான பணிவிணாக்கம்

செயல்முனைப்பற்ற பணிவிணாக்கம் கொள்ளுதல்

பின்னடைதல்

எதிர்ப்புணர்ச்சியை காட்டுதல்

கற்றல் ஈடுபாட்டை வெளிப்படுத்தும் மூன்று வகை வகுப்பறைகள்

கற்றல் செயல்களில் ஈடுபாடு காணப்படும் வகுப்பறை - உண்மையான ஈடுபாடு

பணி விணக்கம் கொண்ட வகுப்பறை - மரபு ரீதியான வகுப்பறை சூழல்

பணியிலிருந்து விலகி காணப்படும் வகுப்பறை -பின்னடைதல் சூழல்

கற்றல் செயல்களில் ஈடுபடுதலை அதிகரிப்பதற்கான ஏழு வழிமுறைகள்

10;2 முறையை பயன்படுத்திடல்

வகுப்பறை பாட போதனைகளில் மாணவர் இட நகர்வுக்கு இடமளித்தல்

சீரான வேகத்தில் வகுப்பறை போதனையை மேற்கொள்ளுதல்

வகுப்பறை கற்பித்தலின் போது மாணவர்கள் திறன்மிகு பின்னூட்டம் பெற செய்தல்

வினா கேட்கும் போது மாணவர்கள் சிந்தித்து பதில் அளிக்க கால அவகாசம் கொடுத்தல்

வகுப்பறை கற்பித்தலுக்கு பின் கற்றவற்றை தொகுத்து அளிக்க செய்தல்

ஆசிரியர் பேசும் போது அவ்வப்போது ஒரு வாக்கியத்தின் நடுவில் சீரிய இடை நிறுத்தம் செய்து பின்பு தொடருதல்

மாணவர்கள் கற்றலில் ஈடுபட செய்தல் மேம்படுத்துவதற்கான குறிப்புகள்

மாணவர்களது தன்னம்பிக்கையை மேம்படுத்துதல்

மாணவர்களது விருப்பு வெறுப்புகளை கண்டறிதல்

மாணவர்களுக்கு சவாலான கற்றல் அனுபவங்களை அளித்தல்

வகுப்பறை ஒழுங்கை நிலை நாட்டுதலில் கண்டிப்புடன் செயல்படுவதோடு மனித நேய அணுகுமுறையை கையாளுதல்

ஆசிரியர் மாணவர் இடையே நல்லுறவு வளர்த்திடுவதற்கான ஆலோசனைகள்:

- வகுப்பறையில் கற்றலுக்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்த முயலும் ஆசிரியருக்கு, சிறந்த ஆயுதம், அவர் மாணவர்களோடு கொண்டுள்ள நெருக்கமான உறவே ஆகும் என்று கூறுகிறார் தாம்ஸன்.
- கேண்டர் கூற்றுப்படி நாம் வகுப்பில் அதிக அளவு முயன்று கற்காததற்கு காரணம் அந்த வகுப்பில் கற்பித்த ஆசிரியரை விரும்பாமல் இருத்தலேயாகும்.
- குழந்தைகள் தமது வாழ்வில் எதிர்ப்படும் முக்கிய நபர்கள் தம்மை மதித்து நடந்தால் பிறரை மதித்து நடக்கும் வாய்ப்பு அதிகம். வகுப்பறை விதிகளையும் நடைமுறைகளையும் அவற்றை மீறுவதால் ஏற்படும் பின்விளைவுகளையும் மாணவர்கள் ஒரு சேர எதிர்த்திடுவர்.
- ஆசிரியர் மாணவர் இடையே நல்லுறவு தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளி நிலையை விட அதிகளவு முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது.
- மாணவர்களை திருத்திட மேற்கொள்ளும் நடவடிக்கைகள்
- மாணவர்களை திருத்திட மேற்கொள்ளும் நடவடிக்கைகள்
- நடந்ததை மீள்நோக்குதல்
- மாணவரது உணர்வுகளை புரிந்து கொள்ளுதல்
- மாற்று வழி செயல்களை சிந்தித்தல்
- குறிப்பிட்ட சூழலை கையாண்டிடும் அங்கீகரிக்கப்பட்ட வழிமுறைகளை விளக்குதல்
- எதிர்காலத்தில் மாணவர் நன்கு நடந்து கொள்வார் என்ற தனது நம்பிக்கையை தெரிவித்தல்.
- மாணவர்களை தமது வகுப்பறை நடத்தையில் நேர்மறையாக பெருமிதம் கொள்ள செய்தல்

- மாணவர்களை பாராட்டி வகுப்பில் ஒட்டு மொத்த சாதனையை பள்ளியில் அனைவர்க்கும் தெரியப்படுத்துதல்
- வகுப்பு மாணவர்களது சாதனைகளையும், படைப்புகளையும் காட்சிபடுத்துதல் மற்றும் கலைத்திறன் தொடர்பான சாதனை, போட்டிகளில் வெற்றி பெற்ற விவரங்களை பள்ளியின் அறிவிப்பு பலகையில் இடம் பெற செய்தல்.
- வகுப்பு மாணவர்களது குடும்ப பின்னணியை அறிய ஆசிரியர் ஆர்வம் காட்டுதல்
- மாணவர்கள் வகுப்பறையில் நுழையும் போது இன்முகத்துடன் வரவேற்றல்
- மாணவர்கள் கூறுவதை கவனமாக கேட்டறிதல்
- மாணவர்கள் உணர்வுகளை புரிந்து கொண்டு பரிவுடன் செயல்படுதல்
- நகைச்சுவை புத்தகங்களை படிக்கச் செய்தல்
- மாணவர்களை விளையாட்டில் பங்கு பெற தூண்டுதல்